*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*24 04 2026 FRIDAY 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

*1. ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகியுள்ள 7 மாநிலங்களவை உறுப்பினர்களில் 3 பேர் பிஜேபியில் இணைந்தனர்.*

*2. விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.*

*3. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடல்சார் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*4. இந்தியா - உஸ்பெகிஸ்தான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி Namangan-ல் இன்று தொடங்கியது.*

*5. தாமஸ் கோப்பை பேட்மிண்டன் இறுதிப் போட்டியின் முதலாவது சுற்றில், இந்தியா இன்று கனடாவை வென்றது.*

*>>>>><<<<<*

*ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து விலகியுள்ளனர்.*

*இவர்களில் திரு. Raghav Chadha, திரு. Sandeep Pathak, திரு. Ashok Mittal ஆகியோர், இன்று புதுதில்லியில் பிஜேபி தலைவர் திரு. நிதின் நபினை சந்தித்து அக்கட்சியில் இணைந்தனர்.*

*முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய திரு. Raghav Chadha, மாநிலங்களவையில் ஆம் ஆத்மி கட்சியின் 3ல் 2 பங்கு உறுப்பினர்கள் பிஜேபியில் இணைவதாக கூறினார்.*

*தாங்கள் ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகியுள்ளதாகவும் அவர் அறிவித்தார்.*

*நாட்டு நலனில் ஆம் ஆத்மி கட்சிக்கு அக்கறையில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.*

*திரு. அரவிந்த் கெஜ்ரிவால் சுயநலமாக செயல்படுவதாகவும் அவர் குறை கூறினார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், நாட்டின் வளர்ச்சிக்காக தாங்கள் பாடுபடப் போவதாகவும் திரு. Raghav Chadha தெரிவித்தார்.*

*இதற்கிடையே, திரு. Raghav Chadha உள்ளிட்டோர் ஆம் ஆத்மி கட்சிக்கு துரோகம் இழைத்துவிட்டதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. சஞ்சய் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.*

*புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அவர்களை தேர்ந்தெடுத்த பஞ்சாப் மாநிலத்திற்கும், சம்பந்தப்பட்டவர்கள் அநீதி இழைத்துள்ளதாக குறை கூறினார்.*

*>>>>><<<<<*

மேற்குவங்கத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

முதல்கட்ட தேர்தலில் அதிக அளவு வாக்குப்பதிவு நடைபெற்றதை அவர் சுட்டிக்காட்டினார்.

இரண்டாவது கட்ட தேர்தலிலும் இது தொடர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மகளிர் பாதுகாப்பிற்கு திரிணாமுல் காங்கிரஸ் அரசு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்த தேர்தலில் வெற்றிபெற்று பிஜேபி அரசு அமைந்தால், மகளிர் பாதுகாப்பிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஊடுருவல்காரர்களுக்கு ஆதரவாக திரிணாமுல் காங்கிரஸ் செயல்படுவதாகவும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

வேளாண்துறையின் வளர்ச்சிக்காக மாநில அரசுகளுடன் கூடுதலாக ஒருங்கிணைந்து பணியாற்ற மத்திய அரசு தயாராக உள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் கூறியுள்ளார்.

இன்று லக்னோவில் வடக்கு மண்டல வேளாண் மாநாட்டின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

வேளாண் துறையின் வளர்ச்சிக்காக மாநிலங்கள் வாரியாக தொலைநோக்கு திட்டம் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

விவாசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் அடையாள அட்டை அரசின் சேவைகளை, அவர்கள் எளிதாக பெறுவதற்கு உதவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடல்சார் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் நோக்கில் தமது துறை செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

11 ஆயிரம் கிலோமீட்டர் கடல்பகுதியை கொண்டுள்ள நம் நாட்டில், 111 உள்நாட்டு நீர் வழித்தடங்கள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

கடல்சார் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

>>>>><<<<<

*உயிரி பொருளாதாரத்தை ஒரு லட்சம் கோடி டாலர் அளவிற்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*Roorkee-யில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங், உயிரி பொருளாதாரத்தில், அடுத்த 21 ஆண்டுகளுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் என்ற இலக்கு எட்டப்படும் என்று தெரிவித்தார்.*

*இதற்கு உதவிடும் கொள்கை, கடந்த ஆண்டு வெளியிடப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*21ஆம் நூற்றாண்டு இந்தியாவிற்கானது என்றும் டாக்டர். ஜிதேந்திர சிங் கூறினார்.*

*>>>>><<<<<*

*சுரங்கத் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் மாநில அரசுகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.*

*இதற்கான திட்டத்திற்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>><<<<<*

*நடப்பு நிதியாண்டில் கோதுமை உற்பத்தி 110 முதல் 120 மில்லியன் டன்னாக இருக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.*

*புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த உணவுத்துறை செயலர் திரு. சஞ்சீவ் சோப்ரா, பல்வேறு மாநிலங்களில் பருவம் தவறி பெய்த மழை காரணமாக கோதுமை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*உலக தடுப்பூசி வாரம் இன்று தொடங்கி, வரும் 30ஆம் தேதிவரை கடைபிடிக்கப்படுகிறது.*

*இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.*

*குறிப்பாக, கருப்பை வாய் புற்றுநோக்கான தடுப்பூசி செலுத்துவது மற்றும் அதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இதனிடையே, HPV தடுப்பூசி செலுத்திக் கொள்வதன் மூலம், கருப்பை வாய் புற்றுநோய் வராமல் தடுக்கலாம் என்று சென்னையைச் சேர்ந்த மகப்பேறு மருத்துவர் திருமதி. ஹவீனா தங்கமணி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடர்பான தகவல்களை வழங்குவதற்கென கட்டணமில்லா தொலைபேசி எண்ணை மத்திய அரசு அறிவித்துள்ளது.*

*1 8 5 5 என்ற எண்ணை தொடர்பு கொண்டு விவரங்களை பெறலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>><<<<<*

*சத்திஷ்கடில் உள்ள அனல் மின் நிலையத்தில் நேரிட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து விளக்கம் அளிக்குமாறு தேசிய மனித உரிமைகள் ஆணையம், அம்மாநில அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறை தலைவருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.*

*இந்த விபத்து தொடர்பாக நாளிதழ்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில், தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.*

*இந்த நோட்டீசுக்கு இரண்டு வார காலத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*குஜராத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை நிறைவடைந்தது.*

*நாளை மறுநாள் நடைபெறவுள்ள வாக்குப்பதிவிற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*>>>>><<<<<*

*இந்தியா - உஸ்பெகிஸ்தான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி இன்று தொடங்கியது.*

*உஸ்பெகிஸ்தானின் Namangan-ல் தொடங்கிய இந்த கூட்டுப் பயிற்சியில், இந்தியாவின் சார்பில் 60 பேர் பங்கேற்றுள்ளனர்.*

*பாதுகாப்புத் துறையில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், இந்த கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெறுகிறது.*

*>>>>><<<<<*

*நேபாளத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர், 29 பேர் காயமடைந்தனர்.*

*Gandaki மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்ததில், இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>><<<<<*

*தாமஸ் கோப்பை பேட்மிண்டன் இறுதிப் போட்டியின் முதலாவது சுற்றில், இந்தியா 4-1 என்ற ஆட்டக்கணக்கில் கனடாவை வென்றது*

*டென்மார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஆயுஷ் ஷெட்டி மற்றும் ஸ்ரீகாந்த் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் வெற்றிபெற்றனர்.*

*இரட்டையர் பிரிவில் ஹம்ச கருணன் – அர்ஜுன் இணையும், சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும் வெற்றி பெற்றன.*

*>>>>><<<<<*

*ஆசிய பீச் விளையாட்டு கபடி போட்டியில் இந்தியா, மகளிர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா, சிரியாவை வென்றது.*

*ஆடவர் பிரிவில் இந்தியா தாய்லாந்தை வென்றது.*

*>>>>>END<<<<<*